**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 49/2021**
**PROSECUTION WITNESS NO. 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சாந்தி | **Caste** | : |
| **Husband Name** | : மலைய பெருமாள் | **Religion** | : **Hindu** |
| **Village** | : ஆட்டுமந்தை தெரு, கீழவாசல் | **Calling** | : வீட்டுக்குடித்தனம் |
| **Taluk** | : தஞ்சாவூர் | **Age** | : **54/2023** |

**(Accused 1, 2, 3 Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.11.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. எம். உதயராணி,** தட்டச்சர்

**<u>C.C.No. 49/2021 29.11.2023</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்**: 01.40

**முதல் விசாரணை**:

**1.** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 மலைய பெருமாள் எனது கணவர் ஆவார். கடந்த 08.01.2021 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் என் மகள் வீட்டிற்கு சீர் வைப்பதற்காக நானும் என் கணவரும் வீட்டிற்கு வெளியே வந்தோம். அப்போது வீட்டு வாசலில் 3 நபர்கள் நின்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் என் கணவர் என்னவென்று கேட்டபோது, அவர்கள் SP அலுவலகத்திலிருந்து வருவதாகவும் எனது கணவரை விசாரிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

2. நாங்கள் எங்கள் மகள் வீட்டிற்கு சென்றுவிட்டு வருகிறோம் என்று கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டோம். மீண்டும் காலை 10.00 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது அந்த 3 நபர்கள் வீட்டு வாசலில் நின்றுக் கொண்டிருந்தார்கள். அந்த 3 நபர்கள் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். நாங்கள் வீட்டிற்குள் சென்றபோது பின்னாலேயே வந்து வீட்டிலிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை பார்க்க வேண்டுமென்று கூறினார்கள். அவர்கள் கூறிய தேதியில் நடந்த சம்பவத்தின் பதிவுகளை சிசிடிவி மூலம் எடுப்பதற்கு எங்களுக்கு தெரியாததால் கடையிலிருந்த என் மகன் பாலாஜியை அழைத்தோம்.

3. என் மகன் வீட்டிற்கு வந்தவுடன் மூவரும் எங்களை வீட்டிற்குள் வைத்து கதவை பூட்டிவிட்டார்கள். ஆஜர் எதிரிகளில் முதலில் நிற்பவர் (ஆஜர் 2 ஆம் எதிரி) ஒரு துப்பாக்கியை எடுத்து எங்கள் அனைவரையும் உட்காரச் சொன்னார். வீட்டில் என் கணவர், என் மகள் நிவேதா ஆகியோர் இருந்தோம். சிறிது நேரம் கழித்து ஒருவர்

**C.C.No. 49/2021 29.11.2023**

மட்டும் வீட்டில் உள்ள அறைகளை சுற்றி பார்த்தார். பின்னர் எங்களை ஒவ்வொருவராக அழைத்துச் சென்று மாடியில் இருந்த அறையில் பிரவுன் நிற cello tape மூலம் கட்டி வைத்தார்கள்.

4. பின்னர் அனைவரும் கீழே வந்துவிட்டார்கள். ஒருவர் மட்டும் வீட்டு வாசலில் நின்றுக் கொண்டிருந்தார். என் கணவர் நெஞ்சு வலிப்பதாக அழுதுக் கொண்டிருந்தார். நாங்கள் எழுந்திருக்க முற்பட்ட போது எங்களை எழுந்திருக்கவிடவில்லை. சிறிது நேரம் கழித்து என் கணவரை வெளியே அழைத்துச் சென்றார்கள். பின்னர் என் மகனையும் என் கணவருடன் போகச் சொன்னார்கள். நானும் என் மகளும் வீட்டிலிருந்தபோது எங்களது கட்டுகளை அவிழ்த்துவிட்டார்கள்.

5. நாங்கள் கீழே இறங்கி வந்து பார்த்தபோது அங்கு யாருமில்லை. பின்னர் என் கணவர் திரும்பி வீட்டிற்கு வந்து பார்த்தபோது அவர் சந்தேகப்பட்டு வீட்டிலிருந்த பீரோவை பார்த்தபோது திறந்து கிடந்தது. அதில் இருந்த 8 பவுன் ஆரம் மற்றும் 1 பவுன் தோடு மொத்தம் 9 பவுன் நகைகளும், பொங்கலுக்கு போனஸ் கொடுப்பதற்காக வங்கியிலிருந்து எடுத்து வைத்திருந்த பணம் 2 அல்லது 3 லட்சம் இருக்கும். ஆகியவற்றை காணவில்லை. பின்னர் என் கணவர் காவல்நிலையம் சென்று புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**6.** எதிரிகள் கூறிய தேதியில் நடந்த சம்பவத்தின் பதிவுகளை சிசிடிவி மூலம் எடுப்பதற்கு எங்களுக்கு தெரியாததால் கடையிலிருந்த என் மகன் பாலாஜியை அழைத்தோம் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரத்தை நீதிமன்றத்தில் நான் புதிதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2 ஆம் எதிரி துப்பாக்கியை காட்டி மிரட்டினார் என்று குறிப்பிட்டு போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரத்தை நீதிமன்றத்தில் நான் புதிதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. சிறிது நேரம் கழித்து ஒருவர் மட்டும் வீட்டில் உள்ள அறைகளை சுற்றி பார்த்தார். பின்னர் எங்களை ஒவ்வொருவராக அழைத்துச் சென்று மாடியில் இருந்த அறையில் பிரவுன் நிற cello tape மூலம் கட்டி வைத்தார்கள். பின்னர் அனைவரும் கீழே வந்துவிட்டார்கள் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா

**C.C.No. 49/2021    29.11.2023**

என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரத்தை நீதிமன்றத்தில் நான் புதிதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சிறிது நேரம் கழித்து என் கணவரை வெளியே அழைத்துச் சென்றார்கள். பின்னர் என் மகனையும் என் கணவருடன் போகச் சொன்னார்கள்.

8. நானும் என் மகளும் வீட்டிலிருந்தபோது எங்களது கட்டுகளை அவிழ்த்துவிட்டார்கள். நாங்கள் கீழே இறங்கி வந்து பார்த்தபோது அங்கு யாருமில்லை. பின்னர் என் கணவர் திரும்பி வீட்டிற்கு வந்து பார்த்தபோது அவர் சந்தேகப்பட்டு வீட்டிலிருந்த பீரோவை பார்த்தபோது திறந்து கிடந்தது என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரத்தை நீதிமன்றத்தில் நான் புதிதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பொங்கலுக்கு போனஸ் கொடுப்பதற்காக வங்கியிலிருந்து எடுத்து வைத்திருந்த பணம் 2 அல்லது 3 லட்சம் இருக்கும். ஆகியவற்றை காணவில்லை என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரத்தை நீதிமன்றத்தில் நான் புதிதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9. என் கணவர் நெஞ்சு வலி என வீட்டை விட்டு வெளியே சென்றபோது அவருடன் யார் சென்றார்கள் என எனக்கு தெரியாது. எனது கணவருக்கு மதியவேளையில் நெஞ்சு வலி ஏற்பட்டது. எனது வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது. நாங்கள் நடத்தி வரும் மளிகைக்கடை எங்கள் வீட்டிற்கு அருகில் தான் உள்ளது. எனது வீட்டிற்கு அருகில் முபாரக் அலி, மீரான் ஆகியோர் வீடு உள்ளது என்றால் சரிதான். அவர்களுடன் நல்ல உறவு முறையில் தான் இருக்கிறோம் என்றால் சரிதான்.

10. என் வீட்டிற்கு வேலைக்கு ஆட்கள் வைத்துள்ளோம் என்றால் எங்கள் வீட்டிற்கு பின்னால் பாக்கெட் போடுவதற்கு 7 பெண்கள் வருவார்கள், அவர்கள் வீட்டுவேலை செய்வார்கள். எங்களது மளிகைக்கடையில் 25-30 நபர்கள் வேலை செய்கிறார்கள். எங்களது வீட்டில் வேலை செய்யும் பெண்கள் தினமும் காலை 09.00 மணிக்கு வந்துவிட்டு மாலை 06.00 மணிக்கு செல்வார்கள். மளிகைக்கடை 8-9 மணியளவில் திறப்போம். நானும், எனது கணவரும், எனது மகளும் எல்லோரும் காலையில் Stadium த்தில் நடைபயணம் செய்வோம் என்றால் சரிதான்.

11. எனது மகள் Race Coaching Centre க்கு படிக்க சென்றார் என்றால் இல்லை.

**C.C.No. 49/2021 29.11.2023**

எனது மகளும் வைத்தீஸ்வரனும் காதலித்தார்கள் என்றால் இல்லை. 2019 ஆம் ஆண்டிலிருந்து இருவரும் காதலித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வைத்தீஸ்வரன் வீட்டிலிருந்து அவரது உறவினர் என் வீட்டிற்கு வந்து பெண் கேட்டார்கள் என்றால் இல்லை. எனது மூத்த மகளுக்கு சீர் கொடுக்க சென்றபோது எனது மகள் நிவேதா வீட்டில் தான் இருந்தார். நாங்கள் எப்போதும் வெளியே செல்லும் போது என் மகளை வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு தான் செல்வோம் என்றால் சரிதான்.

12. எனது மகள் வீட்டை விட்டு சென்றுவிடுவார் என்று பயந்து வீட்டை பூட்டி சென்றேன் என்றால் சரியல்ல, பாதுகாப்பிற்காக பூட்டி செல்வோம். நானும் எனது கணவரும் சீர் கொடுத்துவிட்டு வரும்போது அவர்கள் வாசலிலே தான் இருந்தார்கள். எனது மகன் அப்போது கடையில் தான் இருந்தார். எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது. எனது கணவர் சமுதாயத்தில் பணம் பலம் மற்றும் அரசியல் செல்வாக்குடைய நபர் என்பதால் போலீசாரிடம் வற்புறுத்தி ஒரு பொய்யான வழக்கை எதிரிகள் மீது பதிய செய்தார் என்றால் சரியல்ல.

13. எங்களது வீட்டில் இருந்த நகைகளை நாங்களே காவல்நிலையத்தில் கொடுத்துவிட்டு, நகையை திருடிவிட்டதாக எனது கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. எனது மகளை காதல் செய்த காரணத்திற்காக 1வது எதிரி மற்றும் அவரது நண்பர்கள் மீது எனது கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் அழைத்ததன் பேரில் தான் மேற்படி நபர்கள் எங்களிடம் வந்து பெண் கேட்டார்கள் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.